# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 07.08.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் மூமினின் 16வது வசனம் ஓதினார்கள்:**

**ரஃபீவுத்தரஜாத்தி துல்அர்ஷ். யுல்கிர்ரூஹ மின் அம்ரிஹி அலா மய்யஷாவு மின் இபாதிஹீ லியுன்திர யவ்மத் தலாக்** - (அவன்) உயர் பதவிகளையுடையவனும், அரியணைக்குரியவனுமாவான். (தன்னைச்) சந்திக்கும் நாளைக் குறித்து எச்சரிப்பதற்காகத் தன் அடியார்களுள் தான் விரும்புபவருக்குத் தன் கட்டளையினால் ஆவியை இறக்குகின்றான். (40:16)

பிறகு கூறினார்கள்: அல்லாஹ் **ரஃபிவுத் தரஜாத்** ஆவான். மிக உயர்ந்த பண்புகளையும், பெருமைகளையும் உடையவன். அவன் விரும்புபவரிடம் பரிசுத்த ஆவியை அனுப்புகிறான். அவ்வாறு அனுப்பும்போது அந்த தூதர்களிடம் இவ்வுலக வாழ்வு தற்காலிகமானது. நிரந்தரமான வாழ்வு இவ்வுலகிலிருந்து விடைபெற்று சென்ற பிறகே கிடைக்கிறது என்று எச்சரிக்கை செய்கின்றான். எனவே இவ்வுலகம் ஒரு சோதனைக் களமாகும். எனவே இதில் இறைவனுக்குப் பிடித்த நற்செயல்களை செய்யுங்கள். அல்லாஹ் ஒவ்வொரு சமுதாயத்திற்கும், ஒவ்வொரு இடத்திற்கும் இந்த தூதுச் செய்தியை அனுப்பினான். இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப அவர்கள் மீது கொண்ட பேரன்பின் காரணத்தால் மஸீஹ் - மஹ்தியை அனுப்பினான். யாரை அனுப்பினானோ அவரைப் பற்றி முன்னரே அறிவித்து விட்டான். அவர் மஹ்தியாக - அதாவது இறைவனால் நேர்வழி காட்டப்பட்டவராக இருப்பார். இஸ்லாத்தின் வீழ்ச்சியடைந்த இந்நிலையிலிருந்து அவரை மீட்பதற்காக எழுப்பப்படுவார். எனவே ரூஹ் என்ற இறைவனது தூய வார்த்தையை இறைவன் தனது சிறப்பான அடியார்களுக்கு வழங்குகிறான். இதுவே ஆன்மீக வாழ்வு வழங்குகிறது. மக்களுக்கு நேர்வழிகாட்டுவதற்கு வழிகாட்டியாக அமைகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இவ்வாறு இல்ஹாம் இறங்கியது. **யல்கிஸூஹா அலாமன் யஷாவு மின் இபாதிஹி**. இவ்வசனத்திற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு மொழியாக்கம் தந்துள்ளார்கள். தன் அடியார்களுள் தான் விரும்பியவர்களிடம் ரூஹை போடுகிறான். அதாவது தான் விரும்பியவருக்கு நுபுவ்வத் என்ற பதவி வழங்குகிறான். மேலும் கூறினான். **அன்த மின்னி பிமன்ஸிலத்தி பிரூஹி** - நீ என்னிடத்தில் ரூஹ் உடைய ஸ்தானத்தில் இருக்கிறாய். எனவே தனது சிறப்பான அடியார்களுள் தான் விரும்பியவர்களிடம் இந்த ரூஹை வழங்கி அவர்களின் தகுதியை உயர்த்துவது அல்லாஹ்வுடைய பணியாகும்.

திருக்குர்ஆனில் இதுபற்றி இவ்வாறு வருகிறது.

நாம் விரும்புபவர்களின் தகுதியை உயர்த்துகிறோம். நிச்சயமாக உனது இறைவன் மிகவும் ஞானமுள்ளவனும் நன்கறிந்தவனும் ஆவான். ஆகவே இறைவனே தகுதியை உயர்த்துபவன். இவ்வுலகில் தனது ஆன்மீக அமைப்பை நடத்துவதற்கு தனது நபிமார்கள் வலிமார்களை அனுப்புகிறான். இறைவன் கூறுகிறான். அவன் ஹகீமும் அலீமும் ஆவான். இறைவனது முதிர்ந்த ஞானம் மற்றும் அறிவு யாரை எப்போது யாரிடம் அனுப்ப வேண்டும் என்று முடிவு செய்கிறது.

இக்காலத்தில் அந்த ஹகீமும் அலீமுமாகிய இறைவன் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அலை) அவர்களை மஹ்தி மஸீஹாக அனுப்பியுள்ளான். ஆகரீன்களில் அன்னாரை எழுப்பியது குறித்து திருக்குர்ஆனில் கூறியுள்ளான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த மஹ்தி மஸீஹின்

தகுதிகள் மற்றும் சிறப்பான அடையாளங்களைக் கூறி உம்மத்தே முஸ்லிமாவிடம் அன்னாரை ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தினார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இந்த சொற்களை முஸ்லிம்கள் தூய்மையான உள்ளத்துடன் படித்தால் ஒருபோதும் அன்னாரின் உண்மைப் பேரன்பரை எதிர்க்க மாட்டார்கள். மாறாக, ஏற்றுக் கொள்வதன் பக்கம் கவனம் செலுத்துவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாருக்கு நபி மற்றும் தமது கலீஃபாவின் தகுதியை வழங்கியுள்ளார்கள். எவர் அந்த மஹ்தியின் காலத்தை அடைவாரோ அவர் எனது சலாமை அவருக்கு தெரியப்படுத்துங்கள். இந்த ஹதீஸ் சுருக்கமானது. இன்னும் பல தெளிவான ஹதீஸ்களும் பல்வேறு இடங்களில் உள்ளன. அல் மஜ்மவுல் கபீர் அத்தப்ரானியில் உள்ளது. அபூதாவூது, முஸ்னத் அஹ்மத் பின் ஹம்பல் ஆகியவற்றிலும் உள்ளன. பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தனது மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைப் பற்றி கூறினார்கள்: அவர் தோன்றுவதற்கான அடையாளங்களும் கூறினார்கள். ஹஸ்ரத் இமாம் முஹம்மது பின் பாக்கர் இடமிருந்து அறிவிக்கப்படுகிறது. அவர் ஹஸ்ரத் ஹுஸைன் அவர்களின் பேரனும் அலி ஜெய்னுல் ஆபிதீன் அவர்களின் மகனும் ஆவார்கள். அந்த இமாம் முஹம்மத் பாக்கர் அறிவிக்கிறார்கள். நமது மஹ்தியின் உண்மைக்கு இரு அடையாளங்கள் உள்ளன. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். வானம், பூமி படைக்கப்பட்ட நாளில் இருந்து அவ்விரு அடையாளங்களும் வேறெவருக்காவும் வழங்கப்படவில்லை. சந்திர கிரகணம் ஏற்படும் இரவுகளில் முதல் இரவில் சந்திரனுக்கு கிரகணம் ஏற்படும். சூரியனுக்கு கிரகணம் ஏற்படும் நாளில் மத்திய நாளில் சூரியனுக்கு கிரகணம் ஏற்படும். வானம் பூமி தோன்றிய நாள் முதல் யாருக்காவும் இந்த இரு அடையாளங்களும் இறங்கியதில்லை. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் இமாம் மஹ்தியின் தகுதியை எடுத்துச் சொல்வதற்காக இந்த அடையாளங்களை கூறினார்கள். அது மிகவும் பெருமையுடன் நிறைவேறியது. அதே வேளையில் இன்ன **லிமஹ்தியினா** என்ற சொல்லை பயன்படுத்தியுள்ளார்கள். அதாவது அவர் நம்முடைய மஹ்தியாவார். **இன்ன லிமஹ்தியினா ஆயத்தைன்** – நம்முடைய மஹ்திக்காக இரு அடையாளங்கள் உள்ளன. இவ்வாறு நம்முடைய மஹ்தி என்று குறிப்பிட்டு தமது அன்பையும் நெருக்கத்தையும் வெளிப்படுத்தினார்கள்.

இப்போது நான் இன்னொன்றையும கூற விரும்புகிறேன். எந்த மஹ்தி மஸீஹ் வரவிருந்தாரோ அவருக்கென்று ஒரு தகுதி இருந்தது. அவர் வருவதற்கான அடையாளங்களாக கூறப்பட்ட அனைத்தும் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களிடம் நிறைவேறிவிட்டது. அதனைப் பார்த்து பார்க்கக்கூடிய நல்லியல்பு படைத்தோர் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் நுழைகின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தகுதி அல்லாஹ் அன்னாருக்கு வழங்கவிருப்பதாக கூறிய அனைத்து பதவிகளும் இன்று நிறைவேறியிருப்பதை காண்கிறோம். இன்னும் சில அடையாளங்கள் காலத்தில் நிறைவேறிக் கொண்டு செல்கின்றன. முந்தைய நபிமார்களுக்கு வழங்கப்பட்ட பல எதிர்ப்புகள் இப்போதும் ஜமாஅத்திற்கு எதிராக நடக்கின்றன.

இறைவன் அவர்களின் தகுதியை அக்காலத்திலும் உயர்த்தியே இருந்தான். இப்போதும் உயர்த்தியே உள்ளான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இறங்கிய ஓர் இல்ஹாமில் அல்லாஹ் கூறுகிறான்.

யா அஹ்மது! உனது உதடுகளில் ரஹ்மத் வெளிப்படுகிறது. நீ எனது கண்களுக்கு முன்னால் இருக்கிறாய். இறைவன் உனது புகழை உயர்த்துவான். உலகிலும் ஆகிரத்திலும் உனக்கு தனது நிஃமத்தை முழுமையாக்குவான்.

பிறகு இன்னொரு இல்ஹாம் இறங்கியது! உனக்கு இறைவன் உதவி செய்வான். இறைவன் இஸ்லாத்தின் ஆதாரங்களை உயர்த்துவான். எல்லா நிலையிலும் இறைவனின் மேன்மையைக்

கொண்டுள்ள உம்மை தூய்மைப்படுத்துவேன். தனது வலிமார்களுடன் இறைவன் வைத்திருக்கின்ற தொடர்பு அளவிடற்கரியது. ஒரு வலியுல்லாஹ் ஒரு வழியில் இறைவனால் கவரப்படுகிறார். இன்னொரு வலியுல்லாஹ் (இறைநேசர்) இன்னொரு வழியில் இறைவனை நோக்கி ஈர்க்கப்படுகிறார். எனவே இன்று நாம் இறைவனை அடைய வேண்டும். இறைவனைப் பார்க்க வேண்டும் எனில் அவனது அழகை காண வேண்டும். அதனை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த உண்மைப் பேரன்பரின் மூலம் மட்டுமே காண முடியும்.

இறைவன் மீது பொய்யை இட்டுக்கட்டிக் கூறி ஒருவர் தனது புகழை வளர்த்துக் கொள்ள முடியுமா? அவ்வாறு இட்டுக்கட்டிக் கூறுபவரை இறைவன் தோல்வியும் இழிவும் அடையச் செய்ய வேண்டும். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. இறைவனது உண்மையான வார்த்தை அவருக்கு இறங்கியது. அந்த இறைவன் தனது அடியாரின் மீது தனது கலாமை (வேதத்தை) இறக்குகிறான். எனவே நாம் பார்க்கிறோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தகுதி நாளுக்கு நாள் மேல் நோக்கி வளர்ந்து கொண்டேதான் செல்கிறது.

இறைவன் அவர்களிடம் வாக்குறுதியும் வழங்கி, **வரஃபஅனா அன்க விஸ்ரக்கல்லதீ அன்கழ ளஹ்ரக். வரஃபஅனா லக திக்ரக்** – உமது முதுகை முறித்துக் கொண்டிருந்த சுமையை உம்மை விட்டு இறக்கினோம். உனது புகழை உயர்த்தினோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள். இன்று கண்ணியத்திற்குரிய இறைவன் எனக்கு ஓர் இல்ஹாமை இறக்கினான்.

**யா அப்தர் ராஃபிஃ இன்னி ராஃபிவுக்க இலைய்ய இன்னி முஇஸ்ஸுக லாமானியா லிமா ஆத்தி** – உயர்வு அளிக்கப்பட்ட இறை அடியாரே! நான் என் புறமிருந்து உனக்கு ஓர் உயர்வு வழங்குவேன். உனக்கு கண்ணியமும் வெற்றியும் தருவேன். நான் தருவதை தடுப்பவன் ஒருவனும் இல்லை. எனவே அவர்களுக்கும் அவர்களது ஜமாஅத்திற்கும் இறைவன் வழங்கிய அருட்களை முழு உலகமும் தடுக்க முடிந்ததில்லை.

இன்னொரு இல்ஹாம்: **இன்னி மாஅக யா ரஃபீவுல் கத்ர்** – மிக உயர்ந்த கண்ணியம் வாய்ந்த இமாமே! நான் உன்னுடன் இருக்கிறேன்.

இந்த சில இல்ஹாம்களை நான் இங்கு குறிப்பிடக் காரணம் இந்த இல்ஹாம்கள் மூலம் இறைவன் அன்னாருக்கு ஆறுதல் வழங்கினான். அவர்களுக்காக அவர்களுக்கு ஆதரவாக வானங்கள் பூமியில் அடையாளங்களையும் காட்டினான். அவர்களுடைய ஜமாஅத்தைச் சேர்ந்த ஒவ்வொருவரும் உலகில் எப்பகுதியில் அவர் வாழ்ந்திருந்தாலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய தகுதியின் உயர்த்துதலை உணர்ந்திருப்பார். நல்லெண்ணம் நல்லுயர்வு கொண்டவரின் நேர்வழிக்கு அல்லாஹ் எப்போதும் ஏற்பாடு செய்கிறான். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு ஆதரவாக அவர்களின் தகுதியை எடுத்துக் காட்டுவதற்காக எண்ணற்ற அடையாளங்களை எடுத்து வைத்தான். அதனை முழுவதும் எடுத்துக் கூறுகூது சாத்தியமற்றது. இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வார்த்தைகளால் சில விஷயங்களை கூறுவேன். அவை அன்னார் அஞ்சாமே ஆத்தம் என்ற தனது நூலில் எழுதியுள்ளார்கள். அவற்றை தனது கண்ணியத்திற்கு காரணமானவையாக குறிப்பிட்டுள்ளார்கள். அஞ்சாமே ஆத்தம் என்ற நூலை பாதிரி அப்துல்லாஹ் ஆத்தம் மரணித்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எழுதினார்கள். அப்துல்லாஹ் ஆத்தம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பு நிறைவேறியதற்கு ஓர் அடையாளம் ஆனார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மையை இறைவன் உலகின் முன் வெளிப்படுத்தினான். எவ்வாறிருப்பினும் அப்துல்லாஹ் ஆத்தம் ஒரு பாதிரி. அவர் மரணித்த போது சில உலமாக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொண்ட பகைமையின் காரணத்தால் அதனை ஓர் அடையாளமாக ஏற்றுக் கொள்ளவில்லை. அப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த உலமாக்களை முபாஹலாவிற்கு (பிரார்த்தனை போட்டி) அழைப்பு விடுத்தார்கள். அரபியில் ஒரு திறந்த மடல் எழுதினார்கள்.

அது ஒரு நூல் வடிவில் இருந்தது. 200 பக்கங்களுக்கு மேல் இருந்தது. அதில் தனக்கு ஆதரவாக இறைவன் வழங்கிய அடையாளங்களை குறிப்பிட்டிருந்தார்கள். அதன் கடைசியில் உருதுவில் பின்னுரை ஒன்றும் எழுதினார்கள். அதில் மவ்லவி ஸனாவுல்லாஹ் உடைய ஓர் அடிப்படையற்ற ஆட்சேபனைக்கு பதிலாக ஓர் அடிக்குறிப்பு எழுதியிருந்தார்கள். அதில் இறைவன் தனக்கு வழங்கியுள்ள தகுதி, மேன்மை, கண்ணியம் பற்றி குறிப்பிட்டார்கள். மவ்லவி அப்துல்லாஹ் கஸ்னவியை சான்று காட்டி மவ்லவி ஸனாவுல்லாஹ் அந்த ஆட்சேபனையை வைத்திருந்தார். அதற்கு பதில் அளிக்கும் முகமாக இறைவன் தனக்கு வழங்கிய கண்ணியம் பற்றி எடுத்து வைத்துள்ளார்கள். அதிலிருந்து சிலவற்றை எடுத்துக் கூறுகிறேன். அன்னார் கூறுகின்றார்கள்:

நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். முத்தகீன்களுக்கு, நல்ல தீர்ப்பு வழங்குகின்ற அந்த நீதிபதிகளுக்கெல்லாம் நீதிபதியாகிய இறைவனின் கட்டளையால் நான் எழுதிய விரிவுரை எனது கண்ணியத்திற்கு காரணமானது. ஆத்தம் பற்றி கூறப்பட்ட முன்னறிவிப்பு தெளிவான அதன் யதார்த்த பொருளில் நிறைவேறியது.

பராஹீனே அஹ்மதிய்யாவில் சொல்லப்பட்ட ஓர் இல்ஹாமும் நிறைவேறியுள்ளது. இறைவிருப்பத்திற்கேற்ப ஆத்தம் இறந்து விட்டார். எல்லா எதிரிகளின் முகமும் இருண்டு விட்டது. அவர்களின் பொய்யான மகிழ்ச்சி மண்ணோடு மண்ணாகி விட்டது. இந்த முன்னறிவிப்பு மூலம் நூற்றுக்கணக்கான நாட்களாக செய்யப்பட்டு வந்த ஓர் மறுப்பு ஒழிந்தது. அதனை உண்மைப்படுத்தக்கூடிய ஆயிரக்கணக்கான கடிதங்கள் வந்துள்ளன. எதிரிகள் மற்றும் பொய்யாக்குபவர்கள் மீது சாபம் விழுந்தது.

பிறகு கூறினார்கள். இந்த முபாஹலா நமது கண்ணியத்திற்கு காரணமாக அமைந்தது. பிறகு அந்த அரபிக் கடிதம் அந்த எதிரி மவ்லவிமார்களை பாதிரிமார்களை இழிவுபடுத்துவதற்காக எழுதப்பட்டது. அது நூல் வடிவில் வெளிவந்தது. அதற்கு எதிராக ஆலிம்கள் எதுவும் எழுத முடியவில்லை. பாதிரி அப்துல்லா ஆத்தமும் மரணித்து விட்டார். அரபி மொழியில் புலமை, சிறப்பான அறிவு ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்களுக்கு தான் இருக்கிறது என்று உலமாக்கள் ஒப்புக் கொள்ள வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகினர். அன்னார் காஃபிர் என்று கூறிய எல்லா மவ்லவிகளும் அறிவீனர்கள் என்று நிரூபிக்கப்பட்டது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:

மவ்லவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவி எனக்கு அரபியில் ஒரு வரி கூட எழுத முடியாது என்று குற்றம்சாட்டியிருந்த நிலையில் நான் இந்நூலை வெளியிட்டு இருப்பது அந்த மவ்லவிகளின் அறிவீனத்தை வெளிக் கொண்டு வந்து விட்டது. அல்ஹம்துலில்லாஹ் அலா தாலிக்.

எனது கண்ணியத்திற்கு காரணமாக அமைந்த மூன்றாவது ஒரு விஷயம் கபூலிய்யத் (ஏற்புடைமை) ஆகும். முபாஹலாவுக்கு முன் என்னை ஏற்றுக் கொண்டவர்கள் 300 – 400 பேர் இருக்கலாம். அதன் பிறகு பைஅத் செய்தவர்கள் 8000 பேர் ஆவர். இது 1893 -ல் கூறிய விஷயமாகும். நல்ல பூமியில் விரைவில் விதை முளைத்து விடுகிறது. அதேபோன்று நம் ஜமாஅத்திலும் நல்லியல்பு கொண்டோரின் எண்ணிக்கை அதிகமாகிறது. இறைவன் பூமியை நம்மை நோக்கி இழுத்து வருகிறான். இது அல்லாஹ்வின் ஓர் அடையாளமாகும். இன்று நாம் அதனைக் காண்கிறோம். இந்த அடையாளம் குறித்து எனது ஜல்ஸா Report -லும் கூட கூறினேன்.

மேலும் கூறினார்கள். முபாஹலாவுக்கு பிறகு நமது ஜமாஅத் வியப்பான முறையில் பரவுகிறது. ஒரு சில கற்கள் மட்டுமே காணப்பட்டது. ஒரு கட்டடம் போன்றும் ஒரு சில நீர் துளிகள் போன்றும் காணப்பட்ட ஜமாஅத் ஒரு பெரிய நதியின் வடிவமும் பெற்றுள்ளது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் கடும் எதிர்ப்புக்கிடையிலும் மக்கள் சேர்ந்து கொண்டிருக்கின்றனர். கூறினார்கள். மலக்குகள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். உள்ளங்களின் ஒளியை போடுகிறார்கள். எனவே நமக்கு எவ்வளவு கண்ணியம் கிடைத்துள்ளது. இது இறைவனின் வேலையா? மனிதனின் வேலையா?

பிறகு கூறினார்கள. இந்த முபாஹலாவுக்குப் பிறகு நமது கண்ணியத்திற்கு காரணமாக அமைந்த ஒரு விஷயம் ரமலானில் நடந்த சூரிய சந்திர கிரகணங்களாகும். நூற்றாண்டுகளாக ஹதீஸ் நூல்களில் எழுதப்பட்டு வந்த ஓர் அடையாளம் மஹ்தியை உண்மைப்படுத்த ரமலானின் சூரிய சந்திர கிரகணம் ஏற்படும். இன்றைய காலத்தில் அல்லாஹ் அவ்வடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளான். இறைவனே இந்த அடையாளத்தை வெளிப்படுத்தியுள்ளான். யாருக்காகவும் ரமலானில் சூரிய சந்திர கிரகணம் நிழந்ததாக எந்த வரலாறும் இல்லை. எவரும் குறிப்பிடவும் இல்லை. முபாஹலாவிற்குப் பிறகு இறைவன் எனக்கு இந்த கண்ணியத்தை வழங்கினான்.

கூறினார்கள். குருடர்களே சிந்தியுங்கள். முபாஹலாவுக்குப் பிறகு யாருக்கு கண்ணியம் கிடைத்துள்ளது? எதிரிகள் என்னை இழிவுபடுத்துமாறு துஆ செய்து வந்தனர். பிறகு என்ன நடந்தது? எனக்கு கண்ணியம் தருவதற்காக வானத்தையும் குனிய வைத்தான். சிந்திப்பவர் உங்களுள் ஒருவர்கூட இல்லையா? இதனைப் புரிவதற்கு உங்களில் எவருக்குமே உள்ளம் இல்லையா? பூமியில் கண்ணியம் தந்தான்; வானத்தில் கண்ணியம் தந்தான். நம்மீது ஓர் ஏற்புடைமை உலகில் பரவியது.

பிறகு கூறினார்கள்: முபாஹலாவுக்குப் பிறகு இறைவன் எனக்கு வழங்கிய இன்னொரு கண்ணியம் என்னவெனில் திருக்குர்ஆனின் அறிவில் ஓர் வலுவான ஆதாரத்தை எனக்கு இறைவன் வழங்கினான். நான் இந்த இல்ஹாமைப் பெற்று அப்துல் ஹக் உடைய கூட்டம் மற்றும் பல மவ்லவி கூட்டங்களை இதன் பக்கம் கவனமூட்டினேன். எனக்கு திருக்குர்ஆனின் உண்மைகளும் ஞானங்களும் தரப்பட்டுள்ளன. உங்களுள் யாரும் இவ்விஷயத்தில் என்னுடன் போட்டி போட இயலாது என்று அறைகூவல் விடுத்தேன். எவரும் நமது அறைகூவலை ஏற்றுப் போட்டிக்கு வரவில்லை. இவ்வாறு தமது அறிவீனத்தை ஒப்புக்கொண்டு இழிவின் முத்திரையை தம்மீதே பதித்துக் கொண்டனர். இந்நிலையில் கிராமத்துஸ் ஸாதிகீன் என்ற நூல் எழுதப்பட்டது. இந்த கிராமத்து (அற்புதங்)களுக்கு எதிராக ஓர் எழுத்துகூட எதிரிகளால் எழுத முடிந்ததில்லை.

கூறினார்கள். முபாஹலாவுக்குப் பிறகு இறைவன் இந்த கண்ணியத்தை வழங்கியுள்ளான் என்று நிரூபணம் ஆகவில்லையா?

பிறகு கூறினார்கள்: ஆறாவது விஷயம், முபாஹலாவுக்குப் பிறகு எனக்கு கண்ணியமும் அப்துல் ஹக்கிற்கு இழிவும் ஏற்படக் காரணமாக இருந்த இன்னொரு விஷயம் அப்துல் ஹக் முபாஹலாவுக்குப் பிறகு ஒரு பிரசுரம் வெளியிட்டார். தனக்கு ஒரு மகன் பிறக்கப்போவதாக அறிவித்தார். நானும் அன்வாருல் குர்ஆன் என்னும் நூலை வெளியிட்டேன். அதில் இறைவன் எனக்கு ஒரு மகனை தரப்போவதாக அறிவித்து இருந்தேன். இறைவனின் சிறப்பான அருளினால் என் வீட்டில் ஒரு குழந்தை பிறந்தது. அவருக்கு பெயர் ஷரீஃப் அஹ்மத். இது ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் உடைய அறிவிப்பாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்:**

அந்த சிறுவர் பெயர் ஷரீஃப் அஹ்மத். ஒன்றே முக்கால் வயது ஆகிறது. அப்துல் ஹக்கிடம் இந்த முபாஹலாவுக்குப் பிறகு நீர் கூறிய முன்னறிவிப்பு என்ன ஆயிற்று? என்று கேட்க வேண்டும் என்று கூறினார்கள். இதனை தவிர வேறு எதனை இழிவு என்று கூறுவது? அவர் என்ன கூறினாரோ அது நிறைவேறவில்லை. நான் இறைவனது இல்ஹாம் பெற்று அறிவித்ததை இறைவன் நிறைவேற்றி வைத்தான்.

பிறகு கூறினார்கள்: எனது கண்ணியம் கூடுவதற்கும் எனது ஏற்புடைமைக்கு காரணமாக முபாஹலாவுக்குப் பிறகு நடந்த ஏழாவது விஷயம் என்னவெனில், நம்பிக்கையாளர்களுக்காக இறைவன் காட்டுகின்ற ஓர் தூய உணர்வு வேகத்தை இறைவன் எனக்காக காட்டியுள்ளான்.

இறைவனது அந்த உபகாரத்திற்கு நன்றி செலுத்த என்னிடம் சக்தியே இல்லை. முபாஹலாவுக்குப் பிறகு ஆன்மீகமாகவும் பௌதீகமாகவும் பல வெகுமதிகளை இறைவன் எனக்கு வழங்கினான். ஆன்மீக

வெகுமதிகள் குறித்து நான் கூறி விட்டேன். எனக்கு அற்புதமான முறையில் குர்ஆனிய அறிவை வழங்கியது பற்றி குறிப்பிட்டேன். அதற்கு முன் அப்துல் ஹக் என்ன? எல்லா எதிரிகளுக்கும் இழிவு ஏற்பட்டு விட்டது. இந்த மவ்லவிகள் அனைவரும் வெறும் பெயரளவில் மட்டுமே மவ்லவிகள் என்று நிரூபணமாகி விட்டது.

அது மட்டுமின்றி பௌதீக நிஃமத்துகளும் முபாஹலாவுக்குப் பிறகு என் மீது வெளிப்பட்டுள்ளன. இந்த எளியவனுக்கு கிடைத்த பொருளாதார உதவிகளும் அதிகமாகும். முபாஹலாவின் நாளிலிருந்து இன்று வரை 15,000 ரூபாய் வரை வந்துள்ளது. நூல் வெளியீடுகளுக்காக அவை செலவிடப்பட்டுள்ளன. அம்மக்கள் இறைவழியில் தமது பணத்தை செலவழிப்பது தமக்கு கிடைத்த பெரிய வாய்ப்பாக கருதி செலவு செய்தனர்.

இதற்கு சில தூய்மையாளர்களின் பெயர்களை குறிப்பிடுகின்றனர். அம்மக்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை செலவழித்தனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத் எவ்வாறு வளர்ச்சி பெறுகிறது என்பதை நாம் இன்று கூட பார்த்து வருகிறோம். பொருளாதார நிலையும் சரி; எண்ணிக்கை அடிப்படையிலும் சரி; ஆன்மீக அடிப்படையிலும் சரி.

ஆன்மீக அடிப்படையில் முன்னேற்றம் ஏற்பட்டே ஆக வேண்டும்.

முபாஹலாவுக்குப் பிறகு எனது கண்ணியம் வளர்வதாக வெளிப்பட்ட எட்டாவது விஷயம் என்னவெனில் ஸத்பச்சன் என்ற நூல். 300 வருடகாலத்தில் எவரது சிந்தனையிலும் வராத பல விஷயங்கள் அதில் உள்ளன. பாபாநானக் உடைய நினைவிடத்தில் உள்ள பெட்டி. இதுபற்றி இவ்வளவு காலமாக பாதுகாக்கப்பட்ட ஒரு விஷயம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் வெளிப்பட்டது. அவ்விஷயம் என்னவெனில் பாபா நானக் சாஹிப் ஒரு முஸ்லிமாக வாழ்க்கை நடத்தி வந்தார். கூறுகிறார்கள். பாபா நானா சாஹிப் உண்மையில் முஸ்லிமாக இருந்தார்கள் என்று அந்நூலில் நான் நிரூபித்துள்ளேன். அவர் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். அவர் மிகவும் ஸாலிஹான மனிதராக இருந்தார். இருமுறை ஹஜ்ஜும் செய்துள்ளார். அது நீண்ட காலமாக அப்பெட்டி மறைக்கப்பட்டிருந்தது. அந்தப் பெட்டியைப் பாதுகாத்து வந்த குடும்பத்தினர் நம்மிடம் வந்திருந்தனர். அவர்கள் ஜல்ஸாவில் அதுபற்றி குறிப்பிடவும் செய்திருந்தனர்.

பிறகு எனது கண்ணியம் அதிகரிக்கக் காரணமாக இருந்த இன்னொரு விஷயம் இக்காலக்கட்டத்தில் மட்டும் என்னிடம் 8000 பேருக்கு அதிகமாக மக்கள் என்னிடம் பைஅத் செய்திருந்தனர். சிலர் காதியான் வந்தனர். சிலர் கடிதம் மூலம் பைஅத் செய்தனர். தமது தவ்பாவை வெளிப்படுத்தியிருந்தனர். ஆதமின் மக்களை என் மூலம் தவ்பா செய்வதற்கு அல்லாஹ் ஏற்பாடு செய்துள்ளான் என்பதை நிச்சயமாக நான் அறிகிறேன். இந்த கபூலிய்யத்தின் அடையாளம் இறைதிருப்தியைப் பெற்ற பிறகே கிடைக்கிறது.

என்னை ஏற்றுக் கொண்டவர்கள் பைஅத் செய்த பிறகு தவ்பாவிலும் சீர்திருத்தத்திலும் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று வருகின்றனர் என்பதைப் பார்க்கிறேன். இந்த சீர்திருத்தமும் தகுதியும்தான் ஜமாஅத்தில் வளர்ச்சி பெற வேண்டும். வெறுமனே எண்ணிக்கை மட்டும் அதிகரிப்பது போதுமானதன்று. அஹ்மதிகள் தமது ஆன்மீக நிலையை உயர்த்துவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். ஸஜ்தாவிலும் தஹஜ்ஜுத்திலும் அழுபவர்களாக நான் பலரைக் காண்கிறேன். தூய்மையற்ற மனம் படைத்தோர் அவர்களை காஃபிர் என்கின்றனர்.

இந்த தகுதியே இறையருளால் நம்மில் பலரிடம் நிலைநாட்டப்பட்டுள்ளது. அதற்காக முயற்சி செய்யவும் வேண்டும். நமது எதிரிகள் சிந்திக்க வேண்டும். இந்த தோட்டத்திற்கு வளர்ச்சியும் நீர்ப்பாசனமும் அப்துல் ஹக்கின் முபாஹலாவிற்கு பிறகு எவ்வளவு கிடைத்துள்ளது? இது இறைவனது வல்லமையில்லையா? கண்ணுள்ளவர்கள் காணுங்கள். நமது லாஹூர், கபூர்தலா, சியால்கோட்டின் தூய ஜமாஅத், இந்தியாவின் பல்வேறு பகுதியிலுள்ள நமது ஜமாஅத் இக்லாஸின் ஒளியை தம் முன் கொண்டுள்ளன. எத்துணை தொலைநோக்குள்ள மக்களாக அவர்கள் இருக்கின்றனர்.

ஒரு சபையில் அவர்களின் முகத்தைப் பாருங்கள். அவர்களின் உள்ளத்தை ஈமானால் நிரப்பியது இறைவனின் ஓர் அற்புதமாகும். இது ஒளியால் மின்னுகிறது. உண்மையின் முன்மாதிரியை காட்டுவதற்காக இறைவன் ஏற்படுத்திய ஒரு முதல் ஜமாஅத் ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இந்த கூற்றின் ஆதாரமாக கொண்டு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குறிப்பிட்ட அந்த நகரங்களில் வாழ்பவர்கள் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் வாழ்பவர்களிடம் நான் கூற விரும்புகிறேன். உங்கள் முன்னோர்கள் செய்த அந்த தியாகங்களை எப்போதும் நினைவில் வையுங்கள். அதில் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்லுங்கள். அதுவே ஜமாஅத்தின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமையக்கூடியவை. உண்மையான முறையில் நம்மை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தில் நம்மை இணைத்து எல்லா அருட்களையும் நமக்கு வழங்குபவை இந்த செயல்களேயாகும். அதனை வழங்குவதாக அல்லாஹ் வாக்குறுதியும் வழங்கியுள்ளான்.

இன்று அல்லாஹ்வின் அருளால் இந்தியாவுக்கு வெளியிலுள்ள ஜமாஅத்திலும் இந்த இக்லாஸ் உருவாகி வருகிறது. ஐரோப்பா என்ன? ஆசியா என்ன? ஆப்பிரிக்கா என்ன? அனைத்து இடங்களிலும் உங்களது ஆன்மீக தகுதியை உயர்த்துவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

பிறகு முபாஹலாவுக்குப் பிறகு எனது கண்ணியத்திற்கு காரணமாக அமைந்த பத்தாவது விஷயம் லாஹூரில் நடந்த சர்வசமய மாநாடு ஆகும். எனது கட்டுரை படிக்கப்பட்ட பிறகு எத்தகைய ஓர் சூழ்நிலை ஏற்பட்டது என்பது குறித்து அதிகமாக கூற வேண்டியதில்லை. உள்ள உணர்வோடு மக்கள் எனது கட்டுரையை மிகவும் மகத்துவத்துடன் பார்த்தனர். அதனை விளக்குவதற்கு அவசியமில்லை. அதற்கு அநேக சாட்சிகளை நீங்களே கேட்டிருப்பீர்கள். மலக்குகள் வானத்தில் இருந்து ஒளியை எடுத்துக் கொண்டு இறங்கியது போன்ற ஓர் அசாதாரண சூழ்நிலை அப்போது ஏற்பட்டது. ஒவ்வொருவரின் உள்ளமும் தன்னிச்சையாக அக்கட்டுரையின் பக்கம் ஈர்க்கப்பட்டது. இந்த கட்டுரை வாசிக்கப்பட்டால் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி போன்றோரால் இஸ்லாத்திற்கு தோல்வியையே சந்திக்க வேண்டியிருந்திருக்கும். ஒவ்வொருவரும் இன்று இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்து விட்டது என்று குரல் எழுப்பத் தொடங்கினர். சிந்தியுங்கள். ஒரு தஜ்ஜாலின் கட்டுரை கொண்டு இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்ததா என்ன? இவ்வளவு ஒரு புரட்சியும் தாக்கமும் ஒரு தஜ்ஜாலின் கட்டுரை மீது போடப்பட்டதா?

ஒரு மூஃமின் என்று தன்னை கூறிக்கொண்டு எட்டாயிரம் மூஃமின்களை காஃபிர் என்று கூறுகின்ற முஹம்மது ஹுஸைன் பட்டாலவிக்கு ஏன் அம்மாநாட்டில் அவ்வளவு பெரிய இழிவு ஏற்பட்டது?

நான் உன்னை இழிவுபடுத்த நினைப்பவரை நான் இழிவுபடுத்துவேன் என்று இறைவன் கூறவில்லையா? இந்த ஜல்ஸாவில் மவ்லவிகளின் பார்வையிலும் காஃபிராகவும் முர்தத் ஆகவும் இருக்கின்ற ஒருவனுக்கு கண்ணியம் கிடைக்க வேண்டிய காரணம் என்ன? மவ்லவிகள் இதற்கு பதில் கூற முடியுமா? மேலும் இந்த கட்டுரையின் சிறப்பு குறித்து அது வாசிக்கப்படுவதற்கு முன்பே வெளியிடப்பட்ட முன்னறிவிப்பில் வந்தது. இந்த கட்டுரை அங்கு வாசிக்கப்படுகின்ற அனைத்து கட்டுரைகளையும் மிகைத்து விடும். அந்தப் பிரசுரம் ஜல்ஸாவுக்கு முன்னரே எல்லா இடத்திலும் வெளியிடப்பட்டுள்ளது. இல்ஹாமும் நிறைவேறியது.

மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற இந்த கட்டுரையை வாசித்துக் காட்டியுள்ளார்கள். இந்த கண்ணியமும் பெருமையும் எனக்கு முபாஹலாவுக்கு பிறகு கிடைத்தது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்.

அப்துல் ஹக் இந்த முபாஹலாவுக்குப் பிறகு என்ன கண்ணியத்தை உலகில் பெற்றார் என்பதை மவ்லவிகள் எனக்கு கூறட்டும்! என்ன ஏற்புடைமை அவருக்கு கிடைத்தது! என்ன பொருளாதார உதவிகள் அவருக்கு குவிந்தன? என்ன அறிவுக் கருவூலத்தின் தலைப்பாகை அவருக்கு அணிவிக்கப்பட்டது?

கூறுகிறார்கள். முபாஹலாவுக்குப் பிறகு எனக்கு கிடைத்த 10 பரக்கத்துகளை குறித்து நான் இங்கு எழுதியுள்ளேன். பிறகு இந்த முபாஹலாவை எந்த பலனுமற்றது என்று கருதுபவர் எத்தகைய தீயவர்?

ஒவ்வொரு சந்தர்ப்த்திலும அல்லாஹ் அவர்களுக்கு அடையாளங்களை காட்டினான்.

அல்லாஹ் அவர்களுக்கு வழங்கிய இந்த அடையாளங்களை குறிப்பிட்டு ஓரிடத்தில் அன்னார் கூறுகின்றார்கள்:

நான் எனக்கு இறைவன் வழங்கிய இந்த அருள்களை கூறக்காரணம் வாம்மா பிநிஃமத்தி ரப்பிக பஹத்திஸ் – உமது இறைவன் உமக்கு வழங்கிய நிஃமத்துகளை அறிவிப்பீராக) என்ற கட்டளையின் அடிப்படையிலே ஆகும். மேலும் இவை எனக்கு வழங்கப்பட்டது எனது முயற்சியினால் அல்ல. இறை அருளால் கிடைத்ததாகும். எனக்கு ஆதரவாக இறைவன் வழங்கி வருகிற அடையாளங்களை தனித்தனியாக நான் கூட்டிச் சொல்வதாக இருந்தால் அவை 3 இலட்சத்திற்கும் அதிகமாக இருக்கும் என்று நான் இறைவன் மீது சத்தியமிட்டுக் கூறிக் கொள்கிறோம். இது 1906 ல் நடந்த சம்பவமாகும்.

நான் சத்தியமிட்டுக் கூற முடியும். இறைவன் தனது வாக்குறுதிக்கேற்ப ஒருவரை எழுப்பியுள்ளான் என்பதை நிரூபித்துக் காட்டக்கூடியவையாக சில முன்னறிவிப்புகள் உள்ளன. சில முன்னறிவிப்புகள் எனது தேவைகள் விருப்பங்களுக்கேற்ப இறைவன் நிறைவேற்றித் தருவான் என்று அறிவிப்பவையாக உள்ளன. சில அடையாளங்கள் **இன்னி முஹீனுன் மன் அராத இஹானதக்கா** – உன்னை இழிவுபடுத்த விரும்புகின்றவனை நான் இழிவுபடுத்துவேன் என்ற இறைவனின் வாக்குறுதியை நிறைவேற்றக் கூடியவயைாக என் மீது தாக்குதல் தொடுத்தவர்களை இழிவுபடுத்தக் கூடியவையாக அமைந்துள்ளன. அதுபோன்ற முன்மாதிரிகளை இன்று நாமும் பார்க்கிறோம். சில நாடுகளே இவ்வகை முன்னறிவிப்பு நிறைவேறியதற்கு சாட்சியாக உள்ளன. சில முன்னறிவிப்புகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது வழங்கு தொடுத்தவர்கள் தொடர்பாக அதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு வெற்றி கிடைக்கும் என்று கூறியது. இன்னும் சில முன்னறிவிப்புகள் எனது தோற்றம், வருகை குறித்து எவருக்கும் வழங்கப்படாதவையாக அவை இருந்தன. சில அடையாளங்கள் இக்காலத்தின் நிலையைப் பார்த்து வழங்கப்பட்டவையாகும். இதே நிலை தான் இன்றும் உள்ளது. இக்காலத்தின் நிலை ஓர் இமாமின் தேவையை வலியுறுத்துகிறது. எல்லா இடத்திலும் **ளைஹரல் ஃபஸாது ஃபிர் பர்ரி வல் பஹ்ரி** – கரையும், கடலும் குழப்பத்தில் ஆழ்ந்து விட்டன) என்ற காட்சியை காண முடிகின்றது. குறிப்பாக முஸ்லிம்கள் என்று கூறிக் கொள்கின்ற நாடுகளில் மிக அதிகமான குழப்பங்கள் காணப்படுகின்றன. மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். சில அடையாளங்கள் காலத்தின் நிலைமையைக் குறித்து உருவாகின்றன. அதாவது ஒரு இமாமின் தேவையை காலம் ஒப்புக் கொள்கிறது. எனது நண்பர்கள் விஷயத்தில் எனது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்பட்டன. அத்தகைய முன்னறிவிப்புகள் ஒரு வகையாகும். சில கடும் நோயாளிகள் எனது துஆவின் மூலம் முழுமையான குணம் பெற்றனர். இது ஒரு வகை அடையாளங்களாகும். அவர்களுக்கு குணமாகும் முன்பே எனக்கு தெரிவிக்கப்பட்டனர்.

எனது உண்மையைக் காட்டும் முகமாக பல பெரிய மனிதர்களுக்கு கனவுகள் வந்தன. அத்தகைய அடையாளங்கள் ஒரு வகையாகும். இவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கனவில் கண்டனர். காஜா குலாம் ஃபரித் சாஹிப் போன்றவர்கள் இவ்வகை அடையாளங்களுக்குரியவர்கள்.

மேலும் ஆயிரக்கணக்கான மனிதர்கள் கனவில் அறிவிக்கப்பட்டதால் என்னிடம் பைஅத் செய்தனர். இவர் உண்மையாளர். இறைவனிடமிருந்து வந்தவர் என்று அறிவிக்கப்பட்டது. இத்தகைய காட்சியை இன்றும் நாம் பார்க்கிறோம். இது ஒரு வகை அடையாளமாகும்.

சிலர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கனவில் கண்டனர். கனவில் அம்மக்களிடம் கூறி உள்ளனர். இவ்வுலகம் முடியப் போகிறது. இறைவனின் கடைசி மஹ்தி மஸீஹ் இவராவார். இது ஒரு வகை அடையாளம்.

இன்னும் சில பெரிய மனிதர்கள் எனது பிறப்புக்கு முன்பாகவே எனது பெயரைக் கூறி இவர் மஸீஹ் மஹ்தியாக வருவார் என்று கூறிச் சென்றுள்ளார். நிஃமத்துல்லாஹ், மியா குலாப் ஷா லூதியானா மாவட்டத்தைச் சார்ந்தவர் ஆகியோர் இவ்வகையான அடையாளங்களில் அடங்குவர்.

மேலும் ஓரிடத்தில் கூறுகிறார்கள்: 1904-ல் நான் கரம்தீனின் வழக்கிற்காக நீதிமன்றம் சென்று கொண்டிருந்தேன். அப்போது எனக்கு இல்ஹாம் வந்தது. எல்லா கோணத்திலிருந்தும் நான் உனக்கு பரக்கத்தை வழங்குவேன்.

முழு ஜமாஅத்துக்கும் இந்த இல்ஹாம் அப்போதே தெரிவிக்கப்பட்டது. அது மட்டுமின்றி அல்ஹகம் பத்திரிகையிலும் வெளியிடப்பட்டது. நான் தன்னந்தனியாக ஜெஹ்லம் போய் சேர்ந்த போது என்னை வரவேற்பதற்காக 10000 பேருக்கு மேல் அங்கு காத்துக் கொண்டிருந்தனர். இவ்வாறு அந்த முன்னறிவிப்பு நிறைவேறியது. அனைவரும் என்னை சந்திக்கும் ஆவலுடன் எதிர்பார்த்து நின்று கொண்டிருந்தனர். மிகவும் பணிவுடனும் உருக்கத்துடனும் ஸஜ்தா செய்பவர்களின் நிலையில் நான் அம்மக்களை கண்டேன். பிறகு அங்குள்ள நீதிமன்றத்தின் முன் மக்களின் கூட்டத்தைப் பார்த்தும் நான் வியந்து விட்டேன். 1100 பேர் அப்போது பைஅத் செய்தனர். 200 பெண்களும் வேறு பைஅத் செய்தனர். மேலும் கரம்தீனின் வழக்கிலிருந்தும் நான் விடுவிக்கப்பட்டேன். பல்கேறு தரப்பிலிருந்தும் நமக்கு அன்பளிப்புகளும் குவிந்தன. இவ்வாறு எண்ணற்ற பரக்கத்துகளுடன் நாம் காதியான் திரும்பினோம். மிகத் தெளிவாக அல்லாஹ் அந்த முன்னறிவிப்பை நிறைவேற்றினான்.

பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள். பராஹீனே அஹ்மதிய்யாவில் ஒரு முன்னறிவிப்பு உள்ளது.

இறைவன் மிகவும் தூயவனும் பரக்கத் உள்ளவனும் ஆவான். உனது தூய்மையை அவன் உயர்த்துவான். உனது முன்னோர்களின் பாரம்பரியம் உன்னோடு முடிந்து விடும். உனது குடும்பத்தின் சிறப்புகளுக்கு இறைவன் உன்னை அடிப்படையாக ஆக்குவான். இது எத்தகைய முன்னறிவிப்பு! எவ்வளவு மகத்தான் முறையில் நிறைவேறி விட்டது. நான் எந்த பிரபல்யமும் அற்றவனாக இருந்தேன். உலகிலேயே இல்லாதவனைப் போன்றது எனது நிலை! இந்த முன்னறிவிப்பு தரப்பட்ட 20 ஆண்டுகள் கழிந்து விட்டன. இப்போது அது எவ்வளவு பரிபூர்ணமாக நிறைவேறியுள்ளது என்று பார்க்க வேண்டும்.

இப்போது ஆயிரக்கணக்கானோர் நமது ஜமாஅத்தில் இணைந்துள்ளனர். இவ்வாறு எனது மகத்துவம் உலகில் பரவும் என்று அவர் அறிந்திருந்தார் அப்போது? இறைவனது அடையாளங்களைப் பற்றி சிந்திக்காதவர் மீது பரிதாபம். பிறகு அந்த முன்னறிவிப்பில் எனது வம்சம் பல்கிப் பெருகுவது குறித்தும் உள்ளது. அதற்கான அடிப்படையும் போடப்பட்டது. ஏனெனில் இந்த முன்னறிவிப்பிற்கேற்ப இறைவன் எனக்கு நான்கு மகன்களைத் தந்தான். ஒரு பேரனும் இன்னும் இரு பையன்களும் எனது வீட்டில் பிறந்துள்ளனர். இந்த முன்னறிவிப்பு வந்த போது இவர்கள் அனைவரும் இருந்ததில்லை. இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பௌதீக சந்ததிகளும் உலகில் பரவியுள்ளனர். ஒவ்வொரு நாளும் பல்கிப் பெருகிக் கொண்டே செல்கின்றனர். நாம் ஒவ்வொரு நாளும் ஒரு புது அடையாளத்தைப் பார்க்கிறோம். ஒவ்வொரு சமுதாயத்திலும் நாட்டிலும் மிர்ஸா குலாம் அஹ்மத் கீ ஜே என்ற முழக்கம் செய்யப்படுகின்றது. அல்லாஹ் உண்மையான வாக்குறுதிகள் வழங்குபவனாவான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பெருமையை அதிகரித்துக் கொண்டே செல்கின்றான்.

அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய தகுதியையும் பெருமையையும் உயர்த்தினான். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர்களுக்கு ஆதரவாக அடையாளங்களை நமக்கு காட்டினான். அவன் விரும்புபவர்களுக்கு இந்த தகுதியை வழங்குகிறான். அவன் பொய்யான வாக்குறுதி வழங்கும் இறைவன் அன்று. இன்று வரை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் கொடுத்த

வாக்குறுதியை நிறைவேற்றி வருகிறான். கியாம நாள் வரை அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு அவர்களை மறுப்பவர்களின் மீது வெற்றியைத் தருவான் என்ற வாக்குறுதியையும் அல்லாஹ் நிச்சயமாக நிறைவேற்றுவான். எனவே ஒவ்வோர் அஹ்மதியும் அந்த வெற்றியில் பங்கு பெறுவதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எல்லா வாதங்களின் மீதும் முழுமையான உறுதி கொண்டு திடமாக நின்றவாறு துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் எப்போதும் நம்மை அவர்களுடன் நெருக்கமாக்கி வைப்பானாக. அவர்களிடம் அல்லாஹ் வாக்களித்த வெகுமதிகளிலிருந்து பயன் பெறுவதற்காக எப்போதும் அல்லாஹ்வின் முன் குனிந்து இருப்பது அவசியமாகும். அஹ்மதிய்யத்தின் எதிரிகள் அவ்வப்போது தமது உள்ளத்து காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தியே வருகின்றனர். இஸ்லாத்தின் பெயரால் அல்லாஹ்வின் பெயரால் தமது மவ்லவிமார்கள் கைகாட்டுபவர்கள் மீது அநீதியிழைத்துக் கொண்டே செல்லும் வழக்கம் பொதுவாக பாகிஸ்தானில் காணப்படுகிறது. இதனால் முழு உலகிலும் இஸ்லாத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது. இதன் விளைவு இப்போது வெளிப்படுகிறது. அஹ்மதிகளை இவர்கள் இபாதத் செய்வதிலிருந்து தடுத்தனர். இருந்தும் அவர்களால் அதில் வெற்றி பெற முடிந்ததில்லை. ஆனால் இன்று அவர்களுக்குள்ளே ஏற்பட்ட குழப்பங்களினால் மஸ்ஜிதுகள் தொழ முடியாமல் அடைக்கப்படுகின்றன. சில மஸ்ஜிதுகள் வீழ்த்தப்பட்டுள்ளன. இஸ்லாத்தின் பெயரால் நடக்கும் அநியாயங்கள் எல்லை மீறி விட்டன. கடந்த சில நாட்களுக்கு முன் கிறித்தவர்கள் மீது மிக மோசமாக அநீதி கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. முல்லாக்கள் தாம் விரும்பியதை இஸ்லாத்தின் பெயரால் இஸ்லாத்திற்கு எதிரான செயல் என்று கூறி அநீதிகளை கட்டவிழ்த்து விட்டு விடுகின்றனர்.

பொதுவாக நாட்டில் சட்டம் எதுவுமே செயல்படவில்லை என்று தோன்றுகிறது. சட்டம் எல்லாருக்கும் சமம் என்ற முழக்கம் மட்டும் செய்கின்றனர். ஆனால் சட்டத்தை பயன்படுத்துவதும் தமது சொந்த பயனுக்காகவே செய்கின்றனர். எந்த செயலையும் இஸ்லாத்திற்கு விரோதமானது என்று காட்டி மக்களை கொடுமைப்படுத்துகின்றனர். சட்டம் எல்லாருக்கும் சமம் என்ற முழக்கம் ஓர் ஏழை சம்பந்தப்பட்டபோது முற்றிலும் காணாமற் போய் விடுகிறது. ஏழைக்கு நீதி கிடைப்பதில்லை. எனவே இந்நிலையிலும் இந்த நாட்டிற்காக துஆ செய்யும் கடமை அஹ்மதிகளுக்கு இருக்கிறது. குறிப்பாக பாகிஸ்தான் அஹ்மதிகள் உச்சகட்ட அநீதிக்கு உள்ளாகியுள்ளனர். 1974 மற்றும் 1986 ல் அவர்கள் இயற்றிய சட்டத்தின் கீழ் அவர்கள் விரும்பியவர்களை அநீதிக்கு இரையாக்கலாம். அரசியல்வாதிகளும் தமது அரசியல் இலாபத்திற்காக மவ்லவிகளுக்கு பயப்பட வேண்டியிருப்பதால் நீதியை எந்த அரசியல்வாதியாலும் பாகிஸ்தானில் நிலைநாட்ட முடியவில்லை. எனவே பாகிஸ்தானின் நிலை மிக மோசமான வீழ்ச்சியடைந்து கொண்டிருப்பதால் அஹ்மதிகள் குறிப்பாக துஆ செய்யுங்கள். குறிப்பாக பாகிஸ்தான் அஹ்மதிகள். இறைவன் முன் அதிகமாக குனியுங்கள். அவனிடம் அடைக்கலத்தைக் கேளுங்கள். உங்கள் அமல்களை இறைவனுக்காகவே செய்யுங்கள். அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது செய்த வாக்குறுதியின்படி ஜமாஅத் கண்டிப்பாக வளர்ச்சி பெறும் இன்ஷா அல்லாஹ். எல்லா விஷமங்களிலிருந்தும் ஒவ்வொரு அஹ்மதியையும் அல்லாஹ் பாதுகாப்பதற்காக துஆ செய்யுங்கள். பாகிஸ்தானிலும் மற்ற இடங்களிலும் ஜமாஅத்தை தனது சிறப்பான பாதுகாப்பில் வைப்பானாக. ஜல்ஸாவுக்குப் பிறகு அரபு நாடுகளும் அங்குள்ள அஹ்மதிகளுக்கு நெருக்கடி தர ஆரம்பித்து இருக்கிறது. அல்லாஹ் இவ்வுலகினருக்கு அறிவை வழங்குவானாக. இவர்கள் எதிர்ப்பதற்கு பதில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வாதத்தை ஏற்க வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியாகிய ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தால் எனது சலாமை அவருக்கு கூறுங்கள் என்ற கூற்றின்படி அவர்களுக்கு சலாம் கொண்டு செல்பவர்களாகட்டுமாக. அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதியின் ஈமானிலும் உறுதிப்பாட்டை வழங்குவானாக.

இன்றும் ஓர் பரிதாபகரமான செய்தி ஒன்று கிடைத்துள்ளது. முல்தானில் நமது இளைஞர் ரானா அதாவுல் கரீம் சாஹிப் இவரை நேற்று அவரது வீட்டில் சில இளைஞர்கள் ஷஹீதாக்கி விட்டனர். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவரது வயது 26. வஸிய்யத் செய்தவர். ஜமாஅத்துடன்

நல்ல தொடர்புடையவர். சில காலமாகவே இவரது வீட்டைச் சுற்றி பெயர் தெரியாத சிலர் நடமாடுவதாக செய்தி வந்திருக்கிறது. இவரது சகோதரர்கள் வீட்டைச் சுற்றி முறை வைத்து காவலும் காத்து வந்திருக்கின்றனர்.

இவர் வீட்டை விட்டு வெளியே வந்தருக்கிறார். கடைக்கு செல்வதற்காக வெளி வரவிருந்த சில நிமிடங்களில் சில இளைஞர்கள் வந்து வீட்டிற்கு முன்புறமுள்ள அறையில் வீட்டினரை அடைத்து விட்டு வீட்டுக்குள் நுழைந்தனர். அவரை சுட்டனர். 3 குண்டுகள் பாய்ந்தன. இவ்வாறு அவரை ஷஹீதாக்கினார். நன்கு படித்தவர். தொழில் செய்யக் கூடியவர். இவருக்கு பெற்றோர் உள்ளனர். மனைவி இரண்டு பெண் குழந்தைகள், 3 சகோதரர்கள், 4 சகோதரிகள் உள்ளனர். இப்போது நான் அவரது ஜனாஸாவை நடத்துவேன். அது தவிர ஒரு ஜனாஸாவும் இங்கு வந்துள்ளது. சௌத்ரி இனாயத்துல்லாஹ் சாஹிப். குத்தாமுல் அஹ்மதிய்யா இன்ஸ்பெக்டராக இருந்தார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். வாழ்வை அர்ப்பணித்தவர். 50 ஆண்டுகளாக ஜமாஅத்திற்கு தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார். நல்ல விசுவாசமுள்ள மனிதர். கிலாஃபத்துடன் அளவற்ற பற்று கொண்டவர். ஒரு மகன் ஜெர்மனியில் இருக்கிறார். இன்னொரு மகன் முபல்லிக் பஸ்லுல்லாஹ் சாஹிப். அமீர் மற்றும் மிஸ்னரி இன்சார்ஜ் ஆக இருக்கிறார். இன்னொருவர் இங்கு நாயிப் சதர் அன்சாருல்லாஹ் இருப்பவர் இவரது மாமனார் ஆவார். இவரது ஜனாஸா இங்கு வந்துள்ளது. இன்னும் சில காயிப் ஜனாஸாக்களின் அறிவிப்புகள் முன்னரே கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஜனாஸாக்களும் தொழுவிக்கப்படும். 1) முஹம்மது ஹுஸைன் சாஹிப் - லாஸ் ஏஞ்சல்ஸ், அமெரிக்கா 2) காதிம் ஹுஸைன் சாஹிப் - சிரியாவைச் சேர்ந்தவர். இவரும் ஷஹீதாக்கப்பட்டார். 3) அமத்துல் பஷீர் சாஹிபா - லாஹூர். 4) ஹினா ஹமீத சாஹிபா - இவர்களும் லாஹூரைச் சார்ந்தவர்.

இவர்கள் அனைவரின் ஜனாஸாவும் தொழுவிக்கப்படும். இந்த மர்ஹூம்களின் தகுதியையும் உயர்த்துவானாக. இவர்களுக்கு மன்னிப்பை வழங்குவானாக. இவர்களது குடும்பத்தினருக்கு பொறுமையையும் தைரியத்தையும் வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

JUMUA KUTHBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 07.08.2009

Translated by : **Muallim M. NIZAMUDEEN**

Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**